செ.வெ.எண். 111 நாள்.22.02.2018.

**பத்திரிக்கை செய்தி**

**22.02.2018 அன்று மாலை 4.30 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பிற துறைகளின் பங்களிப்பு**

**ஆவின் நிறுவனம்**

1. பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் செயல்படும் ஊராட்சிகளில் ஆவின் நிறுவன கால்நடைமருத்துவர் மற்றும் கிராமநிலைஊழியர்கள் கோமாரி நோய் தடுப்பூசி பணி செய்திடவேண்டும்.
2. ஊராட்சியில் கால்நடைகளை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் கொண்டு வரவைத்து விடுபாடின்றி அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுமாறு செய்திட பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க ஊழியர்களின் கடமையாகும்.
3. சங்கத்தின் உறுப்பினர்களின் கால்நடைகள் மற்றும் அந்த ஊராட்சியில் உள்ள பிறரின் கால்நடைகளுக்கும் தடுப்பூசிபோடுவதை கண்காணித்திடுதல் வேண்டும்.

**உள்ளாட்சி அமைப்புகள்**

1. தடுப்பூசிப்பணிக்குழுவினர்களுக்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு கொடுத்து தங்களது ஊராட்சியில் விடுபாடின்றி அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
2. எந்த எந்த தேதிகளில் தடுப்பூசி போடப்படுகின்றது என்ற விபரங்கள் கால்நடைபராமரிப்புத்துறையினரால் தெரிவிக்கப்டும். அந்த தேதிகளுக்கு முன்னதாக தங்களுடைய ஊராட்சிபகுதிகளில் **தண்டோரா** மூலம் பொதுமக்களுக்கு நல்ல முறையில் விளம்பரம் செய்திட வேண்டும்.
3. ஊராட்சிகளின் முக்கிய பகுதிகளில் கால்நடைகளை கொண்டு வரச்செய்து தடுப்பூசிப்பணி யை திறம்பட செய்திட கால்நடைபராமரிப்புத்துறை பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்திட வேண்டும்.
4. ஊராட்சிசெயலர்கள் கால்நடைபராமரிப்புத்துறை தடுப்பூசிகுழுவினருடன் சென்று தடுப்பூசிபோடப்பட்ட கால்நடைகளுக்கான சுகாதார அட்டையில் பதிவினை மேற்கொள்ளவேண்டும
5. ஒன்றியவட்டாரவளர்ச்சி அலுவலர் ஊராட்சிகளில் உள்ள பணியாளர்களை கண்காணித்து தடுப்பூசி குழுவினருடன் ஒருங்கிணைப்பு செய்திட வேண்டும்

**வருவாய்த்துறை**

1. கிராம உதவியாளர்கள் கால்நடைபராமரிப்புத்துறை தடுப்பூசிகுழுவினருடன் சென்று தடுப்பூசிபோடப்பட்ட கால்நடைகளுக்கான சுகாதார அட்டையில் பதிவினை மேற்கொள்ளவேண்டும்.
2. நெடுஞ்சாலையில் உள்ள சோதனைச்சாவடிகள் வழியாக கொண்டுசெல்லப்படும் கால்நடைகளுக்கு தடுப்பூசிபோடப்பட்டுள்ளதை உறுதி செய்யவேண்டும். இல்லையெனில் அங்கிருக்கும் குழுக்கள் மூலம் தடுப்பூசிபோடுவதை மேற்கொள்ள ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**வனத்துறை**

1. மேற்குதொடர்ச்சி மலை அடிவாரத்தையொட்டியுள்ள ஊராட்சிகளில் கால்நடைகளை ஒரே இடத்தில் ஒரே இடத்தில் கொண்டு வரவைத்து விடுபாடின்றி அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுமாறு செய்திட வனசுயஉதவிக்குழுவினர் தடுப்பூசிக்குழுவினருடன் இணைந்து செயல்பட வேண்டும்.

வருவாய்த்துறை, வனத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், ஆவின் நிறுவனம் போன்ற துறைகளின் மூலம் செயல்படுத்திட மேற்கண்டவாறு அறிவுரை வழங்கப்பட்டது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.